# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.73/2025

### அ.சா.4 (LW 5 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. ராம்பாபு** | **தொழில்** | |
| **த/க பெயர்** | செல்லத்துரை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | .2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.07.2023 அன்று காலை 06.30மணி அளவில் பணியிலிருந்த போது நான் ,ஜெயந்திலால் தலைமை காவலர் 992 ராமச்சந்திரன், சிறப்பு சார்பு ஆய்வாளர்,கோபால் சார்பு ஆய்வாளர் ரவிசங்கர் ஆகியோருடன் குற்றம் நடைபெறாமல் இருக்க ரோந்து சென்று கொண்டிருந்த போது சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி திண்டுக்கல் குடைப்பாறைப்பட்டி, மேற்கில் உள்ள சுடுகாட்டில் 5 நபர்கள் உருட்டுக்கட்டை, கத்தியுடன் கொள்ளையடிக்க திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறாகள் என கிடைத்த தகவலின் படி குடைப்பாறைப்பட்டி சுடுகாட்டுக்கு சார்பு ஆய்வாளருடன் செல்லும் போது எங்கள் போலிசார் பாட்டியை பார்த்தவுடன் மேற்கண்ட நபர்கள் தப்பித்து ஓடியவர்களை சுற்றி வளைத்து 2 நபர்களை பிடித்து சார்பு ஆய்வாளர் விசாரித்தார். விசாரித்ததில் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பெயர், விலாசம் சொன்னதால் சந்தேகப்பட்டு சார்பு ஆய்வாளர் விசாரித்தார். அப்போது அதில் இருவர் சாகுல் அமீது, தாஜுதின், என பெயர் கூறினார்கள். மீதம் உள்ள 3 நபர்கள் ஓடிவிட்டார்கள். அவர்கள் பற்றி மேற்படி இருவரிடம் விசாரித்த போது ரபீக்ராஜா, சர்தார், முத்துவேல் என கூறினார்கள். சார்பு ஆய்வாளர் விசாரணையில் அவர்கள் மீது பல வழக்குகள் நிலுவையில் இருப்பதால் வழக்கை நடத்துவதற்காக கொள்ளை சம்பவத்தில் ஈடுபடுவதற்காக திட்டிம் தீட்டியது தெரிய வந்தது. பின்பு 06.45மணி அளவில் அவர்கள் இருவரிடமும் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து 07.00மணிக்கு தனியாக அழைத்து சாகுல் அமீதிடம் எந்த அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இல்லாமல் அவர் கொடுத்த வாக்குமூலத்தை சிறப்பு சார்பு ஆய்வாளர் கோபால் பதிவு செய்து கொண்டார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் திண்டுக்கல் குடைபாறைப்பட்டி சுடுகாட்டில்

சுமார் 08.15 மணிக்கு எதிரி சாகுல்அமீது எடுத்து ஆஜர் செய்த இரும்பு கத்தி-2 , உருட்டு கட்டைகள் - 2, சுமார் 260 செமீ நீளமுள்ள நைலான் கயிறு ஆகியவற்றை சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் கோபாலும் கையெழுத்து செய்தோம் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.4.** ஆகும். சான்று பொருளை நான் அடையாளம் காட்டினேன் ஆய்வாளர் என்னை விசாரித்தார். எதிரிகளிடமிருந்து எடுத்த சான்று சா.பொ.1. முதல் சா.பொ.3. ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகளை கைது செய்வதற்கு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 சார்பு ஆய்வாளருக்கு இரகசிய தகவல் எத்தனை மணிக்கு வந்தது என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகள் பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும், அவர்கள் மீது தெற்கு காவல்நிலையத்தில் வேறு வழக்குகள் இருக்கிறது. சம்பவ இடத்தில் எதிரிகள் எந்த இடத்தில் சுடுகாட்டில் குறிப்பாக இருந்தார்கள் என ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி யார் தட்டச்சு செய்தார்கள் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியில் நானும் கோபாலும் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் பொதுவாக கடைகளில் கிடைக்கக் கூடியது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சார்பு ஆய்வாளருடன் சென்றேன் என்றால் ரோந்து வாகனத்தில் சென்றேன். அந்த வாகனத்தின் விவரம் பற்றி ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் , அ.சா.1. இராமச்சந்திரன், ஜெயந்திலால், கோபால் ஆகியோர்கள் ஒன்றாக சென்றதாகத்தான் ஆய்வாளர் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ராமச்சந்திரனும் ஜெயந்திலாலும் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். நாங்கள் இருவரும் ரோந்து வாகனத்தில் சென்றோம். ஆய்வாளரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தை டைப் செய்ததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சான்றுபொருட்களை அ.சா.1. சான்று பொருள் பெட்டிதயார் செய்து என் முன் சீல் வைத்தாரா என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னவாறு அ.சா.1 உடன் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் உண்மையில் எதிரிகள் இல்லை என்றாலும், 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சான்று பொருட்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும், அசா1. மற்றும் வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என் மேல் அதிகாரிகள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகள் காவல்துறை சாட்சிகள்தான், தனி நபர்கள் சாட்சிகள் இல்லை சார்பு ஆய்வாளர் அறிக்கை எதுவும் ஆய்வாளரிடம் கொடுத்தாரா என்றால் அது பற்றி தெரியாது. நான் அறிக்கையில் கையெழுத்து செய்யவில்லை. சம்பவம் இடத்தின் அருகே இருக்கும் பீட் ஆபிசரை சாட்சியாக சேர்க்கவில்லை அந்த பகுதியின் பீட்ஆபிசர் நான்தான். இந்த விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எத்தனை முறை என்னை ஆய்வாளர் விசாரித்தார் என்றால் 2 முறை விசாரித்தார், தேதி ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் உண்மையில் எதிரிகள் இல்லை என்றாலும், 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சான்று பொருட்கள் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும், அ.சா1. மற்றும் வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என் மேல் அதிகாரிகள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.06 21:48:44 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.